இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 200 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 17 – சனிக்கிழமை 01 மார்ச் 2025 – மதுரை 68 பக்கங்கள் + 16 சிறப்பிதழ் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 200: Thiruvalluvar Year - 2056 - Maasi 17 - Saturday 01 March 2025 - Madurai 68 Pages + 16 சிறப்பிதழ் ₹ 5.00

# ஒரே இலக்கு - தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

## பிறந்த நாள் செய்தியில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, மார்ச் 1 -**

**கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் - 'திராவிட மாடல்' அரசின் நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் இன்று!**

**இந்நாளில் கழகத் தலைவர் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "ஒரே இலக்கு - தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!" என்று சூளுரைத்துள்ளார்.**

**தமது இந்தப் பிறந்தநாள் செய்தியினை கழகத் தலைவர் அவர்கள், கண்கவர் காணொலியாகவும் வெளியிட்டு மகிழ்ந்துள்ளார்கள்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின், 'பிறந்த நாள் செய்தி' வருமாறு:

**அனைவருக்கும் வணக்கம்!**



பொதுவாக நான் பிறந்தநாளைப் பெரிய அளவில் ஆடம்பரமாக - ஆர்ப்பாட்ட விழாவாகக் கொண்டாடுவது இல்லை! ஆனால், கழக உடன்பிறப்புகள் மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவது, கழக அரசின் சாதனைகள் மற்றும் கழகக் கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது என்று செயல்படுவார்கள். இந்த முறை, என்னுடைய பிறந்தநாள் வேண்டுகோளாக, என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கிறேன்.

**இன்றைக்குத் தமிழ்நாடு தன்னுடைய உயிர்ப் பிரச்சினையான மொழிப்போரையும் - தன்னுடைய உரிமைப் பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் எதிர்கொண்டுள்ளது.**

**இதனுடைய உண்மையான நோக்கத்தை நீங்கள், மக்களிடம் கொண்டு சேர்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.**

தொகுதி மறுசீரமைப்பு என்பது, நமது மாநிலத்தின் சுயமரியாதை, சமூகநீதி, நம்முடைய சமூக நலத்திட்டங்களைப் பெரிதும் பாதிக்கும்!

இதை நீங்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும்! ஒவ்வொருவரும் மாநிலம் காக்க எழுந்து நிற்க வேண்டும்.!

இந்தியாவுக்கே வழிகாட்டியாக நாம் போராட்டத்தைத் தொடங்கினோம். இப்போது கர்நாடகா, பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களில் இருந்து நமக்கான ஆதரவுக் குரல் வந்துள்ளது.

இதைப் பார்த்த ஒன்றிய அரசு, 'இந்தியைத் திணிக்கவில்லை' என்று சொல்லிக்கொண்டே அதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்!

**மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால், நமக்கான நிதியையும் இன்னும் தரவில்லை! அதேபோல், "தமிழ்நாட்டுக்கான தொகுதிகளைக் குறைக்க மாட்டோம்" என்று மட்டும்தான் சொல்கிறார்களே தவிர, 'மற்ற மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மாட்டோம்' என்று சொல்லவில்லை!**

**நாம் கேட்பது; மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளைப் பிரிக்காதீர்கள்! நாட்டினுடைய வளர்ச்சிக்காக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய தென்மாநிலங்களைத் தண்டிக்காதீர்கள்! அப்படி நடந்தால், அதைத் தமிழ்நாடும் தி.மு.க.வும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்!**

நாம் ஒரு உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்!

தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும் - எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம்! தமிழ்நாட்டுக்காக நாம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு, தமது பிறந்த நாள் செய்தியில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

## தமிழ்நாட்டுக்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடுவோம்! தொகுதி மறுசீரமைப்பின் உண்மையான நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்!

---

### உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

## முதல்வரை - மாற்றுத் திறனாளிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 1 -**

**உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்புக்கு மாற்றுத் திறனாளிகள் நேரில் நன்றி தெரிவித்தனர்.**

ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் ஒரு நலத்திட்டத்தை அறிவிப்பது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு பிறந்த தினத்தை யொட்டி, உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். அதற்கேற்ப நடைபெற இருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கொளததூரில் பெரியார் மருத்துவமனை திறப்பு விழாவில் அறிவித்தார்.

சென்னை முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, பொருளாளர் வரதன் பூபதி மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.

அப்போது, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றில் வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் தக்க சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின்போது தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!



**இன்று வெளிவந்துள்ளது!**

**'திராவிட மாடல்'**
**ஆட்சியின் முதலமைச்சர்,**
**கழகத் தலைவர், திராவிட நாயகர்,**
**மு.க.ஸ்டாலின் அவர்களின்**
**பிறந்த நாள் சிறப்பிதழ்**
**இன்று (மார்ச் - 1) இந்த இதழுடன்**
**வெளிவந்துள்ளது!**


---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர்

## மு.க.ஸ்டாலின்

அவர்களின்



## 72வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

**1-3-2025**

| | | |
|---|---|---|
| காலை 8.00 மணி | - | பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| " " | - | முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| காலை 8.30 மணி | - | தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல் |
| காலை 9.00 மணி | - | அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் - வாழ்த்துப் பெறுதல் |

**- தலைமைக் கழகம்**